# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF PRINCIPAL SPECIAL COURT FOR EC & NDPS ACT CASES, MADURAI.

| | | | |
|---|---|---|---|
| CASE NO | C.C.809/2023 | | |
| PROSECUTION WITNESS | P.W.2 | | |
| DATE | 08-10-2024 | | |
| NAME | Tmt. A.Yogambal | CASTE | |
| FATHER'S NAME | | CALLING | |
| VILLAGE | | RELIGION | |
| TALUK | | AGE | |

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாவட்டம், மேற்கு வட்டம், துவரிமான் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2023ம் தேதி நானும், கிராம உதவியாளர் வேல்முருகனும், கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தபோது காலையில் 08.00 மணியளவில் நாகமலைப்புதுக்கோட்டை காவல் சார்பு ஆய்வாளர் திரு. கணேஷ்குமார் அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு துவரிமான் கண்மாய்கரையில் காரில் கஞ்சா கடத்தி வருவதாக தகவல் வந்ததாகவும், அது சம்பந்தமாக நான் சாட்சியாக இருக்கும்படி சொல்லி அங்கு எங்களை வரச்சொன்னார். அதன்படி நாங்கள் கண்மாய்க்கரை அருகில் விருதுநகரில் இருந்து திண்டுக்கல் செல்லும் நான்குவழிச்சாலைக்கு 08.15 மணியளவில் சென்றோம். அந்த கண்மாய்க்கரை எங்கள் அலுவலகத்தில் இருந்து 1-1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும். நாங்கள் அங்கு செல்லும்போது எனது மேலதிகாரியான வட்டாட்சியரும் அங்கு இருந்தார். நாங்கள் அங்கு சென்றபோது அங்கு நான்கு போலிசாரும், தாசில்தார் தமிழ்செல்வி இருந்தார்கள் மற்றும் மூன்று நபர்கள் இருந்தார்கள். அங்கு வெள்ளை நிற கார் இருந்தது. அதன் பதிவு எண். KL 02 BP 9193 இருந்தது. அந்த வாகனத்தில் பச்சை நிற இரண்டு

சாக்குப்பையும், பச்சை ஆரஞ்சு கலரில் ஒரு சாக்குப்பையும் இருந்தது. அதில் பச்சைநிற இரண்டு சாக்குகளில் தலா 35 கிலோவும், பச்சை ஆரஞ்சு சாக்குப்பையில் 30 கிலோவும் கஞ்சா மொத்தம் 100 கிலோ இருந்தது. அந்த மூன்று மூட்டைகளிலிருந்து சோதனைக்காக தலா 100 கிராம் வீதம் எடுத்தார்கள். மீதம் இருந்த மூட்டைகளை காவல் நிலையம் கொண்டு சென்றார்கள். பின்னர் 10.00 மணிக்கு case file பண்ணினார்கள். அத்தாட்சியில் நான் கையெழுத்து செய்தேன். அந்த அத்தாட்சியில் கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தார். எதிரி நசுருதீன் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.**சா.ஆ.4** ஆகும். பின்பு நசுருதீன் ஷா என் முன்னிலையிலும், வட்டாட்சியர் முன்னிலையிலும், எனது கிராம உதவியாளர் முன்னிலையிலும் தானாக தமிழில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். நசுருதீன் ஷா கையெழுத்து செய்தார். சார்பு ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.**சா.ஆ.5** ஆகும். பின்பு நானும், எனது உதவியாளரும் அலுவலகம் வந்துவிட்டோம். போலிசார் காவல் நிலையம் சென்றுவிட்டார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **:**

எதிரி நசுருதீன் ஷாவுக்கு தமிழில் எழுத, படிக்க தெரியாது என்றாலும் அதனால் அவர் நான் சொல்வது போல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வி.ஏ.ஓ மேனுவல்படி காவல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சாட்சியாக இருக்க செல்லும்போது அந்த விவரத்தை மூன்று நகல்களாக தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அது போல் இந்த வழக்கில் தயார் செய்யவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கிழமை என்ன என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய

தகவல் பற்றி எனக்கு தெரியாது. நான்கு வழிச்சாலை சேரும் இடத்தில் நிறைய வீடுகள், கடைகள் உள்ளன என்று சொன்னால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், அந்த இடத்தில் நிறைய கடைகள், வீடுகள் உள்ளன என்றாலும், வழக்கிற்காக இல்லையென்று மறுத்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் முன்னிலையில் தயார் செய்யப்பட்டதாக சொல்லும் ஆவணங்களில் எதிரிக்கு மலையாளத்தில் விளக்கிக் கூறியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் சொல்வது போல் 1வது எதிரி நசுருதீன் ஷா என் முன்னிலையில் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக நாகமலைப்புதுக்கோட்டை காவல் நிலையத்திற்கு அன்றைய தினமே சென்றேன். நான் அவ்வாறு செல்லும் போது தான் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் அங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நாகமலைப்புதுக்கோட்டை காவல் நிலையத்தில் நான் ஒரு மணி நேரம் இருந்தேன். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என் முன்னிலையில் எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றவில்லை என்றாலும், நான் அரசு அதிகாரி என்பதால் காவல் துறைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு ஆவணங்கள், வழக்கு சொத்துக்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டதில் தான் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும், வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**2,3** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

நான் மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் பராமரிக்கவில்லை. மூவ்மெண்ட் ரிஜிஸ்டரை பார்த்தால் நான் வழக்கு நடவடிக்கையில் பங்கேற்றது பொய் என்பது தெரிந்துவிடும் என்பதால் மூவ்மெண்ட் ரிஜிஸ்டரை பராமரிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மூவ்மெண்ட் ரிஜிஸ்டர் பராமரிக்கப்படுகிறது என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கு சம்பந்தமாக

சாட்சியாக சென்ற விவரம் குறித்து டைரி எழுதவில்லை. எனக்கு சார்பு ஆய்வாளரிடம் இருந்து அழைப்பு வந்ததாக சொன்னவுடன் அந்த விவரத்தை எனது உயர் அதிகாரியான தாசில்தாருக்கு தெரிவித்தேன். அது சம்பந்தமாக எழுத்துப்பூர்வமான உத்தரவு தாக்கல் செய்யவில்லை. தாசில்தாரிடம் கொடுத்தேன். நான் கையெழுத்து செய்ததாக சொல்லும் ஆவணங்களை சார்பு ஆய்வாளர் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எழுத்துருக்களும், அத்தாட்சியில் காணப்படும் எழுத்துருக்களும் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னது போல் எந்த வழக்கு நடவடிக்கையிலும் நான் பங்கேற்கவில்லை என்றாலும், என் முன்னிலையில் கைப்பற்றதல் மற்றும் கைது நடவடிக்கை எதுவும் நடைபெறவில்லை என்றாலும், ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றாலும், நிலையத்தில் வைத்து ஆவணங்களை கையெழுத்து செய்துவிட்டு வழக்கிற்கு ஏற்றவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யப்படவில்லை என்றாலும்,சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிகள் ஒருவருடன் ஒருவர் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல.

**4** வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை **:**

நான் காவல் நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரம் இருந்தேன். அங்கு நானும், கிராம உதவியாளர் மற்றும் காவல் நிலையத்தில் உள்ள காவலர்கள் மற்றும் இந்த எதிரிகளும் இருந்தோம். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் 1ம் எதிரியிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த கோப்புகளில் நான் காவல் நிலையம் சென்று கையெழுத்து இட்டேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்திட்டதாக சொல்லப்பட்ட ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என் முன்னிலையில் எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றவில்லை என்றாலும், நான் அரசு அதிகாரி என்பதால் காவல் துறைக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு ஆவணங்கள், வழக்கு சொத்துக்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டதில் தான் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும், வழக்கு சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**5** வது தரப்பில் குறுக்கு விசாரணை **:**

நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் 1ம் எதிரியிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த கோப்புகளில் நான் காவல் நிலையம் சென்று கையெழுத்து இட்டேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.